அசல் வழக்கு எண்: 50/2021
நாள்: 10.11.2023
PW .1
பெயர்: நாகராஜன்
த/பெ : அழகேசன்
வயது : 40
ஊர் : ஆலத்துார்
தொழில்: கூலிவேலை

**<u>1 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைத்தொடர்ச்சி :–</u>**

உங்களை ஜெயலெட்சுமி சுவீகாரபுத்திரனாக தத்தெடுத்துக்கொண்டதாக நீங்கள் சொல்வதற்கு முன்பாக இந்த உயில் ஆவணம் ஏற்பட்டதற்கு முன்பாக ஜெயலெட்சுமிக்கு சட்டப்படியான வாரிசுகள் இருக்கிறார்களா இல்லையா என்ற விவரம் உங்களுக்குத் தெரியுமா என்றால் அதுப்பற்றி எனக்குத் தெரியாது. உங்களுடைய வழக்குரையில் 1ம் பிரதிவாதி ஜெயலெட்சுமியின் உடன்பிறந்த தங்கை ஆவார் என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான்.

நீங்கள் சொல்வதுபோல் ஜெயலெட்சுமிக்கு சட்டப்படியான வாரிசுகள் உள்ளது எனக்குத் தெரியாது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. இந்த 1ம் பிரதிவாதி ஜெயலெட்சுமியின் சட்டப்படியான வாரிசு என்பதால் இந்த உயிலில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதி பெயரில் உரிமை மாற்றம் செய்யப்பட்டு வருவாய் ஆவணங்கள் மாற்றப்பட்டு 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் தெரியும். தெரிந்தபிறகு தான் அதுத் தொடர்பாக தஞ்சாவூர் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குப்பதிவு செய்தேன். அந்த வழக்கு நிலுவையில் உள்ளது.

வா.சா.ஆ.1 உயிலில் கண்டுள்ள சொத்து உங்களுக்கு உயில் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் தேதிக்கு முன்பே சுவீகாரபுத்திரனாக உங்களை தேர்ந்தெடுத்ததாக சொல்லும் தேதிக்கு முன்பே உயிலில் உள்ள 4 வது சொத்தானது ஜெயலெட்சுமியால் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதன் தொடர்ச்சியாக உயிலில் உள்ள மற்ற சொத்துக்களையும் ஜெயலெட்சுமி கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

இந்த உயிலில் உள்ள சாட்சிகள் யாரையும் உங்களுக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். ஜெயலெட்சுமி என்பவருக்கு தான் தெரியும். வா.சா.ஆ.1 உயில் 1ம் பிரதிவாதியால் அவருடைய சொத்தைப் பொறுத்து எழுதிக்கொடுக்கப்பட்ட உயில் அல்ல என்றால் சரியல்ல. அதேபோல் வா.சா.ஆ.1 உயிலில் 1ம் பிரதிவாதி கையெழுத்து செய்ய வேண்டிய அவசியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் இந்த

உயில் 1ம் பிரதிவாதியாலோ, இறந்துபோன ஜெயலெட்சுமியால் எழுதிக்கொடுக்கப்பட்டது உயில் அல்ல என்று 1ம் பிரதிவாதி மறுக்கும்பட்சத்தில் இந்த உயில் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

நீங்கள் தான் ஜெயலெட்சுமிக்கு திருச்சியில் உள்ள KMC மருத்துவமனை, ஒலிம்பியா தனியார் மருத்துவமனை ஆகியவற்றில் சிகிச்சை செய்வதற்கு பண உதவி செய்தீர்கள் என்பதைக் காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் ஆவணங்கள் என்னிடம் உள்ளது.

இறந்துபோன ஜெயலெட்சுமிக்கு சட்டப்படியான வாரிசு உள்ளதால், உங்களை சுவீகாரபுத்திரனாக தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. இறந்துபோன ஜெயலெட்சுமி பூர்வீகமாக தஞ்சாவூர் மாவட்டம், அம்மன்பேட்டையிலும், நிரந்தரமாகவும் திருச்சியில் உள்ள ஜெயலெட்சுமியின் தங்கை 1ம் பிரதிவாதியின் வீட்டிலும் மட்டுமே வசித்து வந்தார் என்றும், எனவே, எந்த காலத்திலும் ஜெயலெட்சுமி இலுப்பூரில் வசிக்கவில்லை என்பதால், நீங்கள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கானது தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

ஜெயலெட்சுமிக்கான ஈமச்சடங்கு எங்கு செய்யப்பட்டது என்பதை உங்கள் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி ஈமச்சடங்கானது 1ம் பிரதிவாதியின் கணவரால் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தீவிர மருத்துவ சிகிச்சையில் இருந்து இறந்துபோன ஜெயலெட்சுமி இறக்கும் காலத்தில் சட்டப்படியான வாரிசுகள் உள்ள நிலையில், உங்களுக்கு மேற்படி உயிலை எழுதித்தர வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்துள்ள இந்த உயிலானது மோசடியானது என்றால் சரியல்ல.

<u>2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

இறந்துபோன ஜெயலெட்சுமி இலுப்பூரில் வசித்தார் என்பதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. ஆனால் என்னிடம் ஆவணம் உள்ளது. ஜெயலெட்சுமி உங்களை சுவீகார புத்திரனாக தத்தெடுத்துக்கொண்டார் என்பதைக் காட்டுவதற்கு ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் ஆவணங்கள் இல்லை. வாய்மொழியாக தான் தத்தெடுத்துக்கொண்டார்.

இறந்துபோன ஜெயலெட்சுமியின் தாய், தந்தையினர் உயிருடன் உள்ளார்களா இல்லையா என்பது பற்றி நீங்கள் உங்கள் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்துள்ள உயில் முத்திரைத்தாளில் எழுதப்படவில்லை என்றால் சரிதான். உங்களுக்கும் இறந்துபோனதாக சொல்லும் ஜெயலெட்சுமிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும், அவர் உங்களை

தத்தெடுத்துக்கொண்டார் என்பதை நிரூபிப்பதற்கு நீங்கள் எந்த ஆவணத்தையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்பதால் நீங்கள் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. நீங்கள் கோரியுள்ள பரிகாரம் உங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

//sd/–நாகராஜன்,
PW.1.

//sd//– எஸ்.அன்புதாசன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்